2013 மார்ச் 28]

99—

சிமென்ட் ஆலை

***8428—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சிமென்ட் ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொதுவாக ஆண்டிற்கு 10 இலட்சம் டன் உற்பத்தி செய்யும் திறனுடைய சிமென்ட் ஆலை அமைக்க 12 இலட்சம் முதல் 14 இலட்சம் மெட்ரிக் டன் சுண்ணாம்புக் கல் ஆலையின் அருகிலேயே 15 ஆண்டுகளுக்குக் கிடைக்க வேண்டும். சுண்ணாம்புக் கல் சுரங்கம் மானாமதுரையில் இல்லாததால், மானாமதுரையில் ஏற்கெனவே சிப்காட் வளாகம் உள்ளதால் புதிய சிமென்ட் ஆலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றாலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களான, "திட்டங்களுக்காக மக்கள் இல்லை, மக்களுக்காக திட்டம்" என்ற தார்மீக மந்திரத்திற்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு தென் மாவட்ட மக்களின் நலனை மனதில்கொண்டு, சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, தொழில் துறையில் பின்தங்கியுள்ள மானாமதுரை உள்ளிட்ட இடங்களில் தொழில் தொடங்க சிறப்புச் சலுகைகள் வழங்க உள்ளதால் இப்பகுதியில் எந்தவிதமான தொழிற்சாலை தொடங்கினால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

[*2013 மார்ச் 28*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவராக, தமிழர்களுடைய பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்களுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியானது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இந்த மானாமதுரை பகுதியில் விவசாயத் தொழில் மட்டும்தான் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. இந்தப் பின்தங்கிய பகுதியை முன்னேற்றுவதற்காக ஏழைகளின் இதய தெய்வமாக வாழ்ந்து, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், 1979 ஆம் ஆண்டு மானாமதுரையில் பல தொழில்களை ஏற்படுத்தவேண்டுமென்று சிப்காட் தொழில் வளாகத்தைக் கொண்டுவந்தார்கள். நம்முடைய மானாமதுரை பகுதியில் இதுவரை எந்தத் தொழிற்சாலைகளும் கிடையாது.*

எனது மானாமதுரை தொகுதி எப்போதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்டையாக விளங்கிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியிலே ஏழையெளிய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலும், படித்த இளைஞர்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அங்குள்ள ஏழையெளிய மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டும், இளைஞர்களுடைய வேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடும், அந்தப் பகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துத் தந்தால் நலமாக இருக்கும். மானாமதுரையில் சிப்காட் வளாகத்தில் 228.96 ஏக்கர் நிலம் இருக்கின்றது. அங்கே நல்ல தண்ணீர் வளமும், போக்குவரத்து வசதியும் இருக்கின்றன. எனவே, மானாமதுரை சிப்காட் வளாகத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சிப்காட் வளாகம் 492 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 71 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு,*

2013 மார்ச் 28]

17 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. 31 தொழிற்சாலைகள் குறுகிய காலத்திலே தொழிலை ஆரம்பிக்கவிருக்கின்றன. 1,000 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டுடன், சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, அரியலூர் சிமெண்ட் ஆலையில் 5 இலட்சம் டன்னும், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 2 இலட்சம் டன்னும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்ட புகளூர் காகித ஆலையில் 2 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய சிமெண்ட் ஆலையும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது தென் மாவட்டங்களிலே பல சலுகைகளை அறிவிக்க இருக்கின்றார்கள். அந்த வகையிலே புதிய தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோர் வருகின்றபோது மானாமதுரைக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்னுரிமை தரப்படும் எனக் கூறியதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

நூற்பாலை நவீனமயமாக்கல்

***6034—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—